**<u>IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,</u>**

**<u>THARANGAMBADI.</u>**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXV of BNSS)

**<u>DVC. No. 14-2024</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | அபிநயா | Date | : | 01.07.2025 |
| Husband Name | : | தீபக் (எ) தினேஷ் | | : | |

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

1. நான் என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது திருமணத்தின் போது எனது பெற்றோர் செய்த நகைகள், சீர்வரிசை பொருட்கள் மற்றும் வரதட்சனையாக கொடுத்த பணத்தை திரும்ப தரக்கோரி தாக்கல் செய்துள்ளேன். நான் திருமணத்திற்கு முன்பே வரதட்சனை சம்பந்தமாக யார்யார் பேசினார்கள் என்றால் எனது கணவர், மாமனார் மற்றும் மாமியார் பேசினார்கள். மேற்படி விபரத்தை எனது மனுவில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எனது அப்பா என்னுடைய சிறு வயதிலேயே இறந்துவிட்டார் என்று எனது மனுவில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது தந்தை எனக்கு 13 வயது இருக்கும் போது இறந்துவிட்டார். எனது அப்பா கோவிலில் சிற்ப வேலை செய்து வந்தார்.

2. எனக்கு திருமணத்தின் போது செய்த சீர்வரிசை பொருட்கள் போதவில்லை என்றும் மேலும் சீர்வரிசை பொருட்கள் வேண்டும் என்று யார் என்னிடம் கேட்டார்கள் என்றால் எனது மாமியார், எனது மாமனார் மற்றும் கணவர் கேட்டார்கள். எனது மாமனாரை இந்த வழக்கில் தரப்பினராக நான் சேர்க்கவில்லை என்றால் சரிதான். நான் எப்போது கருவுற்றேன் என்றால் 2022 ம் ஆண்டு ஜனவரி மாதம் கருவுற்றேன். திருமணத்திற்கு பிறகு எவ்வளவு நாட்கள் எதிர்மனுதாரர்களுடன் கூட்டுகுடும்பமாக வாழ்ந்து வந்தேன் என்றால் 2022 ம் வருடம் மே மாதம் வரை வாழ்ந்து வந்தேன்.

3. எனது அம்மா சத்துணவு உதவியாளராக 7,8 வருடங்களாக பணியாற்றி வருகிறார்கள். எனது அம்மாவிற்கு மாத சம்பளம் ரூ. 3000/– ஆகும். திருமணத்திற்கு எதிர்மனுதாரர் வீட்டிலிருந்து எனக்கு 6 1/2 பவுன் மாலை, 5 பவுன் தாலி செயின், 1/4 பவுன் காசுகள்–5, ரூபாய் 85000/– மதிப்புள்ள பட்டுபுடவை செய்தார்கள் என்றால் சரியல்ல. எனக்கு எனது பெற்றோர் சீர்வரிசை பொருட்களாக 3 1/2 பவுன் தங்க நகைகள், கட்டில், பீரோ, ரூ.10000/– மதிப்புள்ள சீர்வரிசை பொருட்கள் செய்தார்கள் என்றாலும், நான் எனது பெற்றோர் வீட்டிற்கு செல்லும் போது தங்க நகைகளை எடுத்து சென்றுவிட்டேன் என்றாலும் சரியல்ல. திருமணத்தின் போது பெண் அழைப்பிற்காக எதிர்மனுதாரர் வீட்டிலிருந்து எங்கள் வீட்டிற்கு வந்த போது நான் எதிர்மனுதாரர் வீட்டாரிடம் முகம் கொடுத்து பேசவில்லை என்றாலும், அவர்களை உட்கார கூட சொல்லவில்லை என்றாலும் சரியல்ல. திருமணத்தின் போது நான் 1ம் எதிர் மனுதாரருடன் சந்தோஷமாக போட்டோ எடுத்துகொள்ளவில்லை என்றால் சரியல்ல. திருமணம் முடிந்து பிறகு 1/2 மணி நேரம் நான் யாருடனோ செல்போனில் பேசினேன் என்றாலும், மாலையை கழற்றி எறிந்துவிட்டு அருகில் கிடந்த நாற்காலியை எடுத்து உடைத்தேன் என்றாலும் சரியல்ல. நான் திருமணம் முடிந்து 20 நாட்கள் கூட 1ம் எதிர்மனுதாரருடன் கணவன் மனைவியாக வாழவில்லை என்றால் சரியல்ல.

4. திருமணம் முடிந்த பிறகு 14.11.2021 அன்று நானும் 1ம் எதிர்மனுதாரரும் கோவிலுக்கு சென்ற போது நான் 1ம் எதிர் மனுதாரரிடம் வேறு எந்த பெண்ணுடனும் 1ம் எதிர்மனுதாரருக்கு தொடர்பு இல்லை என கூறி பாலை வைத்து சத்தியம் செய்ய சொன்னேன் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரரிடம் நான் அவருடன் வாழ பிடிக்கவில்லை என எனது அம்மா சொன்னதால் தான் அவரை திருமணம் செய்து கொண்டேன் என்றும் சொன்னேன் என்றால் சரியல்ல. மேற்படி பிரச்சனையை நான் எனது அம்மாவிடம் கூறியதால் தான் எனது அம்மா என்னை அழைதது சென்றுவிட்டார் என்றால் சரியல்ல.

5. நான் இந்த வழக்கை எப்போது தயார் செய்தேன் என்றால் 2024ம் வருடம் செப்டம்பர் மாதம் தயார் செய்தேன். திருமணத்தின் போதே எதிர்

மனுதாரர்கள் என்னை வரதட்சனை கேட்டு கொடுமை செய்திருந்தால் அப்போதே நான் அவர்கள் மீது இந்த வழக்கை தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. எனது கணவர் என்னுடன் சேர்ந்து வாழ வேண்டும் என கோரி சீர்காழி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் 22.07.2024 ல் புகார் கொடுத்தாரா என்றால் இல்லை. அந்த புகாரினை விசாரணை செய்த காவல் உதவி ஆய்வாளர் இருவரையும் சேர்ந்து வாழ சொல்லி என்னையும் எனது குழந்தையையும் எனது கணவருடன் ஒரே இருசக்கர வாகனத்தில் அனுப்பி வைத்தார்கள் என்றால் சரியல்ல. அப்போது நான் எனது கணவரை அசிங்கமான வார்த்தைகளால் திட்டிவிட்டு இருசக்கர வாகனத்திலிருந்து இறங்கி எனது பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல. நான் தான் 1ம் எதிர் மனுதாரருக்கு எதிராக சீர்காழி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன்.

6. நான் திருமணம் முடிந்த பிறகு எதிர்மனுதாரர் வீட்டில் மருமகளாக நான் எந்த வேலையும் செய்யவில்லை என்றாலும், தான்தோன்றிதனமாக நடந்து கொண்டு எதிர்மனுதார்கள் வீட்டில் பிரச்சனை செய்து வந்தேன் என்றாலும் சரியல்ல. சீர்காழி சார்பு நீதிமன்றத்தில் 1ம் எதிர்மனுதாரர் விவாகரத்து கோரி எனக்கு எதிராக HMOP 86/2024 என்ற வழக்கு தாக்கல் செய்த பிறகே நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதற்கு முன்பே நான் தாக்கல் செய்துவிட்டேன். எனது திருமணத்தின் போது செய்த சீர்வரிசை பொருட்கள், நகைகள் மற்றும் பணத்திற்கு ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. எனது அப்பா வெளிநாட்டில் வேலை பார்த்து அங்கேயே நகைகள் வாங்கியதாலும், எனது அப்பா தற்போது இறந்துவிட்டதாலும் அந்த ரசீதுகள் என்னிடம் இல்லை. எனது நகைகள், சீர்வரிசை பொருட்கள் மற்றும் பணத்தின் புகைபடங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. உண்மையிலேயே நான் சொல்வது போல் எவ்வித சீர்வரிசை பொருட்களும் செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர்கள் என்னை எவ்வித கொடுமையும் செய்யவில்லை என்றாலும், நன்றாக பார்த்துகொண்டார்கள் என்றாலும், நான் தான் எதிர்மனுதாரர்களிடமிருந்து பணம் பறிக்க வேண்டும்

என்ற கெட்ட எண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

7. நான் மனுவில் சொல்லியுள்ளது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் இந்த வழக்கிற்காக பொய்யான சங்கதிகளை சொல்லியுள்ளேன் என்றாலும் சரியல்ல. எதிர்மனுதாரர்கள் எனக்கு கொடுத்த நகைகள் மற்றும் பட்டுபுடவையை நான் எடுத்துசென்றுவிட்டேன் என்றாலும் சரியல்ல. அதனால் நான் தாக்கல் செய்துள்ள இந்த மனு தள்ளுபடி செய்ய வேண்டியது என்றால் சரியல்ல. எனது மகள் திரிதாவை பார்ப்பதற்காக 1ம் எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் உரிய மனு தாக்கல் செய்ய உள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிர்மனுதார்களிடம் நான் பிரச்சனை செய்து விட்டு கோபித்துகொண்டு எனது பெற்றோர் வீட்டிற்கு சென்ற பிறகு நான் கருவுற்றிருப்பதாக எதிர்மனுதார்களின் உறவினர்களிடம் பொய்யாக கூறினேன் என்றாலும், அதை உண்மை என நம்பி எதிர்மனுதார்கள் என்னை மருத்துவமனைக்கு அழைத்து சென்று பரிசோதித்த போது கருத்தரிக்கவில்லை என மருத்துவர்கள் கூறினார்கள் என்றாலும் சரியல்ல. அதன் பிறகு நான் எதிர்மனுதார்கள் வீட்டில் 10 நாட்கள் தங்கி விட்டு சென்ற போது தான் நான் கருவுற்றேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர்கள் என்னை பார்க்கவந்த போது அவர்களை அசிங்கமான வார்த்தைகளால் திட்டி வீட்டை விட்டு வெளியில் போக சொன்னேன் என்றால் சரியல்ல.

8. நான் எனது வளைகாப்பு மற்றும் குழந்தை பிறந்தது எதற்கும் எதிர்மனுதாரர்களுக்கு சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனது தாயாரின் பேச்சை கேட்டுகொண்டு நான் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதால் நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. எனது தாயார் ரூ.3000/– தான் மாத சம்பளம் பெற்று வருவதாலும், நான் எந்த வேலையும் பார்க்காததாலும் நான் மனுவில் கோரியுள்ள சீர்வரிசை பொருட்களை செய்யும் அளவிற்கு எனக்கு வசதி இல்லை என்றால் சரியல்ல.